பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம் நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: சித்திரை 18 (30—4—68) செவ்வாய் ★ வெளியூர்: சித்திரை 19 (1—5—68) புதன் [இதழ்: 265

கொள்முதலில் சாதனை!

"இது வரையில் — மூன்றே மாதங்களில் தமிழகத்தில் 1 கோடியே 4 இலட்சம் மூட்டை அரிசி (4 இலட்சத்து 15 ஆயிரம் டன்) கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது; இதுபோன்று இவ்வளவு விரைவில் விவசாயிகள் ஆர்வத்துடன் நெல் அளிப்பது இருந்ததில்லை"

என்று உணவுத் துறை அமைச்சர் கே.ஏ. மதியழகன் அவர்கள் திருத்தணி ஊராட்சிமன்றம் அளித்த வரவேற்புக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

முறையான முயற்சிகள் மூலம் முன்னேறுவது உறுதி

அமெரிக்கப் பயணத்தின் மூலம் அண்ணா பெறும் நம்பிக்கை

வாஷிங்டன் வாழ் இந்தியச் சமூகத்தினரிடை விளக்கவுரை

வாஷிங்டன், ஏப். 28 —

வாஷிங்டனில் உள்ள இந்தியத் தூதரகத்தில் கல்விப் பிரிவில் அதிகாரியாக உள்ளவரும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவருமான திரு. இராசாராம், தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களுக்கு ஒரு வரவேற்பு அளித்தார். இந்திய மக்களடங்கிய இந்த வரவேற்புக் கூட்டத்தில் அண்ணா அவர்கள் பேசுகையில், இந்தியாவில் நிலவும் தொழில் -- கல்வி நிலைமைகள் குறித்து விளக்கினார்; கல்வி -- தொழில் துறைகளில் இந்தியாவுக்கும்—அமெரிக்காவுக்குமிடையே உள்ள வேறுபாடுகளையும் எடுத்துக்காட்டினார்.

"வெளிநாட்டில் உள்ள இந்திய மக்கள், தாங்கள் பெறும் அனுபவத்தைக் கொண்டு இந்தியாவுக்கு ஆலோசனைகளைத் தெரிவிக்கவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். அவரது உரை வருமாறு:—

ஒப்பிட்டுப் பார்ப்பது சரியானதுதானா?

"இந்தியாவின் சாதனைகளை அமெரிக்காவுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது சரியல்ல; இந்தியாவைவிட அமெரிக்கா மிகப் பெரிய நாடு; ஆனால், இந்திய மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கினர்தான் இங்கு உள்ளனர்.

"பிரும்மாண்டமான வகையில் உற்பத்தி செய்யும் பாணியையும், இயந்திர மயத்தையும் அடிப்படையாகக் கொண்டது அமெரிக்கச் செழிப்பு; ஆனால், இந்தியாவில் நாம் மேற்கொள்ளும் திட்டங்களோ அதிகம் பேருக்கு வேலைவாய்ப்புத் தரக்கூடியதாக இருக்கவேண்டும். நாம் இயந்திர மயப் பாதையைப் பின்பற்றக்கூடாது என்பது இதன் பொருளல்ல.

பொருளாதாரத் துறையில் அமெரிக்க வாழ்க்கை முறை, தனிநபர் சுதந்தரத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். இந்தியாவில் மத்திய அரசு, கலப்புப் பொருளாதாரத்தைக் கொள்கையாகக் கொண்டிருக்கிறது.

பொருளாதாரத்துக்கு அது ஒரு சுமைதான்!

துரதிருஷ்டவசமாக, இந்தியாவில் அரசுத் துறை நிறுவனங்களின் சாதனைபற்றி மகிழ்ச்சியுடன் பேசக்கூடிய நிலைமையில் நாம் இல்லை. இந்தியாவில் அரசுத் துறை நிறுவனங்கள் இலாபகரமாய் நடக்கவில்லை.

இந்தியா போன்ற ஏழை நாட்டில் இலாபம் எதுவுமே கிடைக்காமல், சுமார் ரூ. 2,000 கோடி அரசுத் துறையில் முடங்கிக் கிடக்கிறது. நாட்டின் பொருளாதாரத்துக்கு அது ஒரு சுமையாக ஆகிவிட்டிருக்கிறது!

ஆனால் அரசுத் துறைத் தொழில்கள் மாற்றியமைக்கப்பட்டு வருகின்றன. அடுத்த ஐந்தாண்டுகளில் இலாபம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கற்கவேண்டிய மாபெரும் படிப்பினை

தனியார்த் துறையிலுங்கூட, அமெரிக்காவுக்கும் — இந்தியாவுக்குமிடையில் வேறுபாடு இருக்கிறது. அமெரிக்காவில் உள்ள தொழில்கள், தங்கள் இலாபத்தில் பெரும் பகுதியை மற்றத் தொழில்களில் முதலீடு செய்வதாக இங்குள்ளவர்களிடம் பேசியதிலிருந்து அறிகிறேன்.

ஆனால் இந்தியாவிலோ, நமது தொழிலதிபர்கள் அப்படிச் செய்வதில்லை; அமெரிக்கர்களிடமிருந்து நாம் கற்க வேண்டிய ஒரு படிப்பினையாகும் இது!

அமெரிக்கக் கல்வி முறையில் ஒவ்வொரு துறையையும் தனியாக எடுத்துக்கொண்டு, சிறப்பாகப் பயிற்சி அளிக்கப்படுகிறது; இந்தியாவில் இப்படி இல்லை; இதற்கு நிறையப் பணம் வேண்டும் என்பதுதான் இதற்குக் காரணம். இருப்பினும், நாம் இதுபற்றி யோசித்து ஏதேனும் செய்தாக வேண்டும்.

அமெரிக்காவில் கல்வி நிறுவனங்கள் சொந்தத்தில் நிறைய நிதி வசதிகளுடன் கூடியவையாக உள்ளன தவிர, தாராளமாக நன்கொடைகளும் கிடைத்துவருகின்றன.

அந்த நாற்காலிக்கும் மூன்று கால்கள்தான்!

அமெரிக்காவில் பேராசிரியர்களுக்கும் — மாணவர்களுக்கும் இடையில் தோழமை உணர்ச்சி நிலவுகிறது.

யேல் பல்கலைக் கழகத்தில் சில வகுப்புக்களில் ஓர் ஆசிரியருக்கு 3 அல்லது 4 மாணவர்களுக்கு மேல் இல்லை.

இந்தியாவிலோ, கோடிக்கணக்கான ஏழை மக்களுக்கு வீடு தேடிக் கல்வி வசதியை எடுத்துச் செல்லவேண்டியிருக்கிறது!

இந்தியக் கல்லூரிகளில் மாணவர் நெரிசல் அதிகம்; உயர்நிலைப் பள்ளிகளுக்குப் போதிய சாதன வசதிகள் இல்லை. சில ஆரம்பப் பள்ளிகளுக்குச் சொந்தக் கட்டிடமே கூட இல்லை. நான்கு ஆசிரியர்கள் இருந்தால் மூன்று நாற்காலிகள்தான் இருக்கின்றன. அந்த நாற்காலிகளில் சிலவற்றுக்கு, மூன்றே கால்கள்தான்!

ஆனால் நல்ல காலமாக இந்த விஷயங்களில் நமக்குத் தெளிவான கண்ணோட்டம் இருந்து வருகிறது. போதிய வசதிகள் தான் இல்லை!

வளங்கொழிக்கும் நிலையை அடைய இயலாதா?

நமக்கு எத்தனையோ தொல்லைகள் இருந்தபோதிலும், நாம் சரியான பாதையில் முன்னேறி வந்தால் வளம் கொழிக்கும் நிலைமையை எட்டுவோம் என்ற நம்பிக்கையும் உறுதியும் எனக்கு அமெரிக்க வருகையின் பயனாக ஏற்பட்டிருக்கிறது.

போதிய இயற்கை வளமும் அபரிமிதமான மக்கள் வளமும் நமக்கு உண்டு. தொழில் நுட்பத் திறனில் நம் மக்கள் எந்நாட்டினருக்கும் பின்தங்கியவர்கள் அல்லர்!

வேட்கைகள் நிரம்பிய நாடு இந்தியா!

வெளி நாடுகளில் வசிக்கும் இந்தியர்கள் ஆங்காங்கு தாங்கள்— பெறும் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு இந்தியாவின் முன்னேற்றத்துக்கு உதவக்கூடிய யோசனைகளைத் தெரிவித்து வரவேண்டும்.

"இங்கெல்லாம் வானளாவும் மாட மாளிகைகள் இருக்கின்றன; நீச்சல் குளங்கள் இருக்கின்றன" என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம்; இவையெல்லாம் பன்னெடுங் காலம் கடின உழைப்புக்குப்பின் ஏற்படக்கூடியவை!

ஆனால் நாம் பின்பற்றக்கூடிய வேறு பல விஷயங்களும் எத்தனையோ உள்ளன; அவற்றைப் பற்றி நீங்கள் தகவல்களை அனுப்பி வரலாம்.

அமெரிக்கா வளம் கொழிக்கும் நாடு! ஆனால் இந்தியாவோ, வேட்கைகள் நிரம்பிய நாடாக இன்னமும் உள்ளது! இந்த வேட்கைகளை நனவாக்குவதற்கு வேண்டிய வசதிகள் இன்னமும் நமக்கு ஏற்படவில்லை!"

அண்ணா அவர்கள், தம்முடன் எடுத்து வந்த உலகத் தமிழ் மாநாட்டுத் திரைப் படம் இந்தியத் தூதரகத்தில் போட்டுக் காட்டப்பட்டது.

மொரார்ஜி தேசாயின் நேரத்துக்கேற்ற பேச்சு!

மக்களவையில் செழியன் கண்டனம்

பற்றுக்குறை நிதிநிலை மூலம் ஏற்படும் விளைவு குறித்து எச்சரிக்கை

புதுடில்லி, ஏப். 29—

நாடாளுமன்ற மக்களவையில், நிதி மசோதாவின் மீது நடைபெற்ற விவாதத்தில் தி.மு.க. உறுப்பினர் இரா. செழியன் கலந்துகொண்டு பேசுகையில், கடந்த சில ஆண்டுகளின் பற்றுக்குறை வரவு -- செலவுத் திட்டத்தினால் ஏற்பட்டுள்ள விளைவுகளை எடுத்துரைத்தார்.

"விலையேற்றத்தை ஒருநிலைப்படுத்தத் தக்க முறையில், பொருளாதாரச் சிக்கனம் கடைபிடிக்கப்படவில்லை" என்று குற்றஞ்சாட்டினார்.

துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாய், போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு வி.கே.ஆர். வி. ராவ் ஆகியோர், பற்றுக்குறை நிதி நிலை குறித்து ஏற்கனவே பேசியுள்ள பேச்சுக்களை திரு. செழியன் படித்துக்காட்டி, அவர்கள் பல்வேறு நேரங்களிலும் வெவ்வேறு கருத்துக்களைத் தெரிவித்திருப்பதாகச் சுட்டிக்காட்டினார்.

மொரார்ஜி தேசாயின் பேச்சுப் பற்றி திரு. செழியன் குறிப்பிட்டுப் பேசுகையில், 'இவ்வாண்டில், திரு. மொரார்ஜி, பற்றுக்குறை நிதிநிலை மூலம் ஒரு மரபை உண்டாக்கியிருக்கிறார்' என்றார்.

உடனே திரு. மொரார்ஜி குறுக்கிட்டு, 'பற்றுக்குறை நிதிநிலை பற்றிய எந்தவிதக் கொள்கையையும் ஏற்கவில்லை' என்றார்.

இரா. செழியன்:— "திரு. மொரார்ஜி தேசாய் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும் அதற்கு வழிவகுக்கிறார்.

அவருடைய நடவடிக்கைகள், பற்றுக்குறை நிதிநிலைக்கு எதிராக இருக்கவில்லை. பணவீக்கம் ஏற்படுத்தக்கூடிய நிலை அதிகரித்துக்கொண்டே போகுமானால், அது நல்லதல்ல.

அரசுத்துறைச் செலவுகளில் சிக்கனம் அனுசரிக்கப்படவில்லை. கடந்த ஆண்டில் மட்டும் ரூ. 77 கோடி வீண் செலவு செய்யப்பட்டிருப்பதாகப் பொதுக் கணக்குக் குழுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

வருமான வரி விலக்குக்கான வரம்பை, பூதலிங்கம் குழுவின் பரிந்துரைக்கேற்ப ரூ 7,500 ஆக உயர்த்த வேண்டும்."

மூன்று நாட்களுக்கு முன்னதாகவே திரும்புகிறார் அண்ணா

தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் பொருட்டு விரைகிறார்

அமெரிக்க -- ஆசியப் பயணம் மேற்கொண்டுள்ள தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் தமது சுற்றுப்பயணத் திட்டத்தைச் சுருக்கிக்கொள்ள முடிவு செய்துவிட்டார்.

ஏற்கனவே திட்டமிட்டிருந்தபடி, திரும்பவேண்டிய நாளுக்கு மூன்று நாட்கள் முன்னதாகவே திரும்பிவிட அவர் முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

வாஷிங்டனில் தமது நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்டு நேற்று மாலை புறப்படுகையில், அண்ணா அவர்கள், தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் பொருட்டு இரண்டு நாட்கள் முன்னதாகவாவது இந்தியா திரும்ப விரும்புவதாகத் தெரிவித்தார்.

(4-ம் பக்கம் பார்க்க)

அறிவிப்பு

பாட்டாளிகளின் திருநாளான மே முதல் நாள் நமது அலுவலகத்திற்கு விடுமுறையாகையால், 'நம் நாடு' அடுத்த இதழ் 2—5—68 சென்னையிலும், மறு நாள் வெளியூர்களிலும் கிடைக்கும்.

—பொறுப்பாளர்

நம்நாடு

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.எ.

திருவள்ளுவராண்டு 1999 சித்திரை 18 (30—4—68) செவ்வாய்

மே நாள்---

வேண்டுகோளும் வாழ்த்தும்

மே முதல் நாளை, உலக நாடுகள் ஒவ்வொன்றிலும் உள்ள பாட்டாளி மக்கள், தங்கள் விடுதலை நாளாகக் கொண்டாடி வருகின்றனர்.

சோவியத் இரஷ்யா போன்ற பொதுவுடைமை நாடுகளில், மே முதல் நாள், தேசியத் திருவிழாவாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன.

மே முதல் நாளுக்குப் பொதுவுடைமை நாடுகளால் தனிச் சிறப்பும் முக்கியத்துவமும் ஏற்பட்டதென்றாலும், 'முதலாளித்துவ நாடு' எனச் சொல்லப்பட்டுவருகின்ற அமெரிக்காவில்தான், அத்திருநாள் முதன்முதலாகக் கொண்டாடப்பட்டது.

அமெரிக்க நாட்டைத் துவக்கமாகக் கொண்ட—'மே முதல் நாள்' எனச் சிறப்பித்துக் கூறப்படும் அந்தத் தொழிலாளர் விடுதலை நாள், புகழ்மிக்க தனி வரலாற்றைக் கொண்டிருப்பதாகும்.

'உழைப்பும், ஓய்வும், உல்லாசமும் ஒரு நாளில் சரிசமமாகத் தொழிலாளர்களுக்குக் கிடைத்திட வேண்டும்' என அமெரிக்கத் தொழிலாளர்கள் கிளப்பிய கோரிக்கைக்கு வெற்றி கிடைத்த பெருநாளே மே முதல் நாள்!

அந்த மகத்தான வெற்றி, கேட்டதும் கிடைத்திடவில்லை—அமெரிக்கத் தொழிலாளர்களுககு!

தொழிலாளர்கள் கேட்டுவிட்டார்கள் என்பதற்காக, அக்கோரிக்கையிலிருக்கின்ற நியாயத்தை ஒப்புக்கொண்டு, அக்கோரிக்கைக்கு இணங்கிவிட அந்தக் காலக் கட்டத்திலிருந்த அமெரிக்க முதலாளிகளும், அந்த முதலாளிகளின் வலிவையும் ஆதரவையும் முதுகெலும்பாகக் கொண்டு இயங்கிவந்த அன்றைய அமெரிக்க அரசும் உடனடியாகத் துணிந்திடவில்லை.

தொழிலாளர்கள் அக்கோரிக்கையைக் கிளப்பிய நேரத்தில், அலட்சியம் காட்டியது அன்றைய அமெரிக்க அரசு!

தங்களுடைய நியாயமான கோரிக்கையைத் துச்சமாக மதித்த அன்றைய அமெரிக்க அரசின் போக்கைக்கண்டு தொழிலாளர்கள் அடங்கி ஒடுங்கி, கோரிக்கையைக் கைநழுவ விட்டுவிடவில்லை.

கோரிக்கையைப் பெற அந்தத் தொழிலாளர்கள், அன்றைய அமெரிக்க அரசுக்கு எதிராகப் போராடத் துணிந்தனர்.

தொழிலாளர்களின் பிடிவாதத்தைக் கண்ட அமெரிக்க அரசு, தொழிலாளர்களின் போராட்டத்தை நசுக்குவதற்குக் கொடிய அடக்குமுறைகளை ஏவிற்று.

தொழிலாளர்கள் சொல்லொணாத் துயரத்துக்கும், துன்பத்துக்கும் ஆளாயினர்!

அரசு ஏவிய கொடிய அடக்குமுறைகள், தொழிலாளர்களில் பலரை வாட்டி வதைத்தன!

அடக்குமுறைகளின் கடுமை கூடக்கூட, நியாயமான கோரிக்கையைப் பெறுவதில் தொழிலாளர்கள் கொண்டிருந்த உறுதியும் மென்மேலும் உரம் பெற்றது.

அரசை எதிர்த்துப் போராடித் தங்களுடைய கோரிக்கையைப் பெற்றே தீருவது என்ற முடிவுக்கு வர—அக்கொடுமை மிக்க அடக்குமுறைகள், தொழிலாளர்களுக்குக் குறிப்பிடத்தக்க தூண்டுகோலாக அமைந்துவிட்டன!

'அடக்குமுறைகளின் கடுமையைக் கூட்டினால், தொழிலாளர்கள் என்றும்போல் அஞ்சி அடங்கிவிடுவர்; கிளப்பிய கோரிக்கையைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுவர்' என்ற அரசின் நினைப்பு, அடிப்படையிலேயே தவறானதாகும்—என்ற உண்மையை அந்தப் பாட்டாளிகள் தங்கள் ஒற்றுமையாலும் மன உறுதியாலும்—துன்பத்தை ஏற்றுக்கொள்ளத் துணிந்துவிட்ட தியாக புத்தியாலும், அமெரிக்க அரசைத் தெள்ளத்தெளிய உணர்ந்துகொள்ளச் செய்தனர்.

அந்த நியாயமான கோரிக்கைக்காகத் தொழிலாளர்களின் தலைவர்கள் தூக்குக் கயிற்றையும் முத்தமிடலாயினர்.

இப்படி அமெரிக்க அரசால் தூக்கிலிடப்பட்ட அமெரிக்கத் தொழிலாளர் தலைவர்கள் செய்த தியாகம் வீண் போகவில்லை—விழலுக்கிறைத்த நீராகிவிடவில்லை.

அந்தத் தொழிலாளர் தலைவர்கள் செய்த உயிர்த் தியாகம், இன்று உலகம் முழுவதிலும் பாட்டாளி மக்களின் விடுதலை நாளாக—மே விழா நாளாக மலர்ந்து மணம் பரப்பிக்கொண்டிருக்கிறது.

கொண்ட இலட்சியத்துக்காகத் தங்கள் உயிரைத் தியாகம் செய்து, அதன் வாயிலாக அன்றைய அமெரிக்கத் தொழிலாளர்களுக்கு நல்வாழ்வையும், அன்று முதல் இன்றுவரை பெருகிக் கொண்டே வருகின்ற தொழிலாளர் சமுதாயத்துக்கு உரிமை வேட்கையையும் ஊட்டிக்கொண்டு புகழுடம்புடன் விளங்கிவருகின்ற அத்தொழிலாளர் தலைவர்களுக்கு நமது வீர வணக்கம் உரித்தாகுக!

தமிழகத்தைப் பொறுத்தவரையில்—உலகப் பாட்டாளிகளின் விடுதலை நாளான மே முதல் நாளை, தமிழக மக்களுக்கு அறிமுகம் செய்துவைத்த பெருமைக்கு நாம் உரிமை கொண்டாட விரும்பவில்லை; என்றாலும், அத்திருநாளுக்கும்—தொழிலாளர்களுக்கும் உள்ள தொடர்பையும், அத்திருநாளின் வரலாற்றையும் தமிழக மக்களிடம் தீவிரமாகப் பரப்பிய பெருமைக்கும் நமக்கும் இருக்கக் கூடிய நெருக்கமான உறவை, இத்தருணத்தில் சுட்டிக்காட்டுவதில் தவறு இல்லை.

உலகத் தொழிலாளர்களின் விடுதலை நாளான மே முதல் நாளை அரசாங்க விடுமுறை நாளாகச் சென்ற ஆண்டு முதற் கொண்டு கழக அரசு ஆக்கியிருக்கிறது.

தொழிலாளர்கள் நல்வாழ்வு பெறுவதில் கழக அரசுக்குரிய ஆசையையும் நம்பிக்கையையும் மேற்படி செயலிலிருந்தே தொழிலாளர்கள் தெரிந்துகொள்ளலாம்.

இந்த ஆண்டு கொண்டாடப்படவிருக்கின்ற தொழிலாளர்களின் விடுதலை நாளான மே முதல் நாளை, 'அனைத்துக் கட்சிகளும் ஒன்றாக இணைந்து பொதுவாகக் கொண்டாடவேண்டும்' எனத் தீர்மானித்திருப்பது மகிழ்ச்சியுடன் வரவேற்கத்தக்க நற்செய்தியாகும்

அனைத்துக் கட்சிகளும் இணைந்து நின்று, பொது நாளாக மே முதல் நாளைக் கொண்டாடும் முடிவு வெற்றி பெற, முன்னேற்றக் கழகம் முனைந்து முயற்சி மேற்கொண்டதை இங்கு கோடிட்டுக் காட்டாமலிருப்பதற்கில்லை.

மே நாளைக் கொண்டாடுவதை பொறுத்தவரையில்—இப்பொழுது ஏற்பட்டிருக்கின்ற அனைத்துக் கட்சியின் இணைப்பு—தொழிலாளர்களைப் பற்றிய மற்ற பிரச்சினைகளிலும் தொடர்ந்து செயல்பட்டு வரவேண்டும். அவ்வாறு செயல்படுவதற்கு, மே நாளைக் கொண்டாடுவதில் உருவாகியுள்ள நல்லெண்ணம், தொடர்ந்து துணைசெய்ய வேண்டும் என்பதே நமது இதயபூர்வமான விருப்பம்.

தமிழகத்தின் பல ஊர்களில் மே நாள் விழா, அனைததுக் கட்சிகளின் சார்பில் பொதுவாகக் கொண்டாடப்படவிருக்கிறது. அவ்விழாவின் தொடர்பாக ஊர்வலங்களும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அவ்வூர்வலங்களில் பின்வரும் எழுச்சி முழக்கங்களைத்தான் முழங்குதல் வேண்டும் என, அனைத்துக் கட்சியின் இணைப்புக் குழுச் சார்பில் கோரிக்கை விடப்பட்டிருக்கிறது. அந்த முழக்கங்களை இதன்கீழ் அப்படியே தருகின்றோம்:—

மே நாள் தத்துவம் வெல்க!
உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்!
நிற வெறி ஒழிக!
மாநில அரசுகளுக்கு அதிக உரிமைகள் வேண்டும்!
ஆட்டோமேஷன் முறைகளைப் புகுத்தாதே!
ஆட குறைப்புச் செய்யாதே!
அதிக வேலை வாங்காதே!
மார்டின் லூதர் கிங் கொள்கை வெல்க!
மார்டின் லூதர் கிங் நாமம் வாழ்க!
கதவடைப்புச் செய்யாதே!
தபால்—தந்திக் கட்டணத்தை உயர்த்தாதே!
இரயில்வே கட்டணத்தைக் குறை!
வியட்நாமில் சனநாயகம் வெல்க!
வியட்நாம் மண்ணிலிருந்து எல்லா அந்நியப் படைகளும் வெளியேறுக!
ஊதிய போர்டு முடிவுகளைச் செயல்படுத்து!
வாழ்க்கைத்தரப் புள்ளிகளுக்கு ஏற்ற பஞ்சப் படியை வழங்குக!
தொழிலாளர்—விவசாயிகள் தோழமை வளர்க!
தொழிலாளர்—மாணவர் தோழமை வளர்க!
நியாயமான போனசு வழங்குக!
பாங்கிகள் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் தொழிலாளர் விரோதப் பிரிவை ரத்து செய்க!
உலக சமாதானம் ஓங்குக!

விழா வெற்றி பெறவேண்டும்; தொழிலாளர்கள், அரசியல் கட்சி வேற்றுமைகளை இந்த நாளிலாவது மறந்து—'அனைவரும் ஒன்று' என்ற உயர்ந்த உணர்வைப்பெற்று—அனைவரும் நல்வாழ்வு வாழ ஊக்கமுடன் உழைத்து—உழைப்பின் உறுபயனைப் பெற்று மகிழ்ந்திடல் வேண்டும் என, அனைத்துத் தொழிலாளர்களையும் வேண்டிக்கொள்ளுகின்றோம்---பெரும் மகிழ்ச்சியுடன் வாழ்த்துகின்றோம்.

—கா. க.

மாநிலங்கட்கு அதிக அதிகாரம் தேவை

அரசியல் சட்டத்தை மறு ஆய்வு செய்ய குழு அமைக்க வேண்டும்

மத்திய -- மாநில உறவு நிலை குறித்து அமெரிக்காவில் அண்ணா கருத்துரை

வாஷிங்டன், ஏப். 28—

"மாநிலங்களுக்குக் கூடுதலான அதிகாரங்கள் இருக்க வேண்டும்; வெளிநாட்டுப் படையெடுப்பிலிருந்து இந்தியாவைப் பாதுகாக்கவும், நமது ஆதிபத்திய உரிமையைப் பாதுகாக்கவும் வேண்டிய அதிகாரங்கள் மட்டுமே மத்திய அரசிடம் இருக்கவேண்டும்; இதனைக் கருத்தில் கொண்டு இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்தியமைக்கவேண்டும். இதுபற்றி ஆய்வு செய்யவேண்டியது அவசியம்"

என்று தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் இங்கு, கருத்தறிவித்தார்கள்.

இங்குள்ள இந்தியத் தூதரகத்தில் நடந்த இந்திய மக்களடங்கிய கூட்டமொன்றில் அண்ணா அவர்கள் பேசுகையில், மத்திய அரசுக்கும்—மாநில அரசுகளுக்குமிடையேயுள்ள உறவு நிலை குறித்து மேலும் கூறியதாவது:—

"அரசியல் சட்டம் செயல்படுவது பற்றி ஆராய்ந்து, மத்திய அரசுக்கும்—மாநில அரசுகளுக்குமிடையே அதிகாரங்கள் ஒதுக்கீடு பற்றி யோசனை கூற, ஒரு குழுவை (கமிஷன்) நியமிக்க வேண்டும்.

மத்திய அரசின் தலைவர்களுடன்—குறிப்பாகத் தலைமையமைச்சருடன் நட்பு முறையிலேயே உறவு இருக்கிறது. தமிழக அரசுக்கு மத்திய அரசு பாரபட்சம் காட்டவில்லை என்றாலும், நடைமுறையில் இப்போதுள்ள அதிகார ஒதுக்கீடு முறையானது சில சங்கடங்களை உண்டு பண்ணுகிறது.

தற்போது மாநிலத்தில் உள்ள வணிக நிறுவனங்களும், வெளிநாட்டு ஒத்துழைப்பைப் பெறுவதற்குக்கூட மத்திய அரசின் அனுமதியைப் பெறவேண்டியுள்ளது."

சமூக நல்வாழ்வே வியாபாரத்தின் அடிப்படை!

திருச்சி மாவட்ட வணிகப் பெருமக்கள் வகுத்துக் கொண்ட ஒழுக்க நெறி!

திருச்சி, ஏப். 28—

இங்கு நடைபெற்ற திருச்சி மாவட்ட வர்த்தக சங்க முதலாவது மாநாட்டில் வர்த்தக சமூகத்தினருக்கான ஒழுக்க நெறி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது; அதாவது:—

"திருச்சி மாவட்ட வர்த்தக சமூகத்தினர், தங்கள் தொழிலில் நேர்மையாகவும் நாணயமாகவும் நடந்துகொள்வர். அவர்கள், அரசு ஆணைகட்கும் விதிகளுக்கும் கட்டுப்பட்டு நடந்துகொள்வர். சமூகத்தின் நல்வாழ்வைப் பொறுத்தே தமது வியாபாரம் இருக்கிறது என்பதை உணர்ந்திருக்கின்றனர். எனவே, மக்கள் நல்வாழ்வு எனப்படும் பலமான அடித்தளத்தின்மீது தமது வியாபாரம் செழித்து வளர வேண்டும் என்று அவர்கள் விரும்புகின்றனர்."

தரைக்கு அடியிலுள்ள தண்ணீர்

பாசனத்துக்குப் பயன்படுத்த தமிழக அரசின் திட்டம்

திருச்சி, ஏப். 27—

தமிழகத்தில் இவ்வாண்டில், 1,200 குழாய்க் கிணறுகள்—ஊற்றுக் கிணறுகள் தோண்டுவதற்குத் தனிப்பட்டவர்களுக்குக் கடனும், மானிய உதவியும் அளிக்க அரசு எண்ணியுள்ளது.

இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தேவையான சாதனங்களை வாங்குவதற்கு அல்லது தயாரிப்பதற்கு அரசு எண்ணியிருக்கிறது.

தரைக்கு அடியில் உள்ள ஊற்று நீரைப் பயண்படுத்துவதற்குக் கடன்—மானிய உதவி அளிப்பதை அரசு, சில ஆண்டுகளாக நீடித்து வருகிறது.

முதலமைச்சர்கள் மாநாடு

மே 20, 21-ல் கூடும்

திருச்சி, ஏப். 28—

"மாநில முதலமைச்சர்கள்—கூட்டுறவுத்துறை அமைச்சர்கள் மாநாடு, சென்னையில் மே 20, 21 ஆகிய நாட்களில் நடைபெறும்"

என்று, உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் தெரிவித்தார்.

தேசிய மேம்பாட்டுக் குழு கூட்டம் டில்லியில் மே 17, 18 ஆகிய நாட்களில் கூடும் என்றும் முதலமைச்சர் அண்ணா அவர்கள் தமது சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு பாங்காக்கிலிருந்து நேரே டில்லிக்கு வந்து அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளக்கூடுமென்றும் அவர் தெரிவித்தார்.

கல்சா இயக்கத்தின் தத்துவங்கள்

தமிழ்ப் பண்பாட்டுக்கு ஒத்தவையாக உள்ளன

சீக்கிய மக்களிடையே அமைச்சர் கே. ஏ. மதியழகன் உரை

சென்னை, ஏப். 29—

"'கல்சா' இயக்கத்தின் தத்துவங்களான சமுதாய நீதியைப் பாதுகாப்பதற்காகப் போரிடும் மனோதிடம்—நல்லதை எடுத்துரைக்கும் அஞ்சாநெஞ்சம்—எப்போதும் துடிப்போடு உள்ள இலட்சியப்பற்று—சிந்தனையும் செயலும் சிதறாத ஒருமைப்பாடு—'தன் நெஞ்சறிவது பொய்யற்க' என்று சொல்வதுபோல் தூய சிந்தையோடு இருத்தல் என்ற தத்துவங்கள் மிகவும் தேவைப்படுகின்றன.

"நாட்டின் கௌரவம் பாதுகாக்கப்பட வேண்டுமானால்—நீதியும் சமத்துவமும் நிலவ வேண்டுமானால், இந்தத் தத்துவங்கள் மனித வாழ்க்கையின் வழிகாட்டிகளாக விளங்கவேண்டும்.

"சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன்பே தமிழ் இனம், 'யர்தும் ஊரே—யாவரும் கேளிர்' என்று பாடி மகிழ்ந்தது; இதுபோன்ற பரந்த நோக்கு, 'கல்சா' தத்துவத்தில் இடம் பெற்றிருப்பது பெருமகிழ்ச்சி தருகிறது"

என, தமிழக உணவுத் துறையமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள், ஏப். 13-ம் நாள் சென்னை சீக்கியர் ஆலயத்தில் நடந்த குரு கோவிந்த சிங் பிறந்த நாள் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்; அவர் மேலும் பேசியதன் சுருக்கம் வருமாறு:—

"சுமார் இருநூற்று எழுபது ஆண்டுகளுக்குமுன்பு பத்தாவது குருவாகிய குரு கோவிந்த சிங், 'கல்சா' இயக்கத்தின்மூலம் பல உயரிய உண்மைகளைக் கற்பித்தார். இந்த உண்மைகள் காலத்தால் அழியாமல் இன்றைய நாளிலும் பொருந்துவனவாக இருக்கின்றன.

'கல்சா' இயக்கத்தின் சீரிய தத்துவமும், அனைவரையும் உடன் பிறந்தோராகக் கருதும் உயர்ந்த தன்மையும் இந்தியப் பண்பாட்டுடன் ஒன்றியிருப்பவையாகும். அது மட்டுமல்ல; பண்டைச் சிறப்புக்களை மறவாமல், புதுமை உலகில் வாழ்வதற்கு இவை வழி காட்டுகின்றன.

'கல்சா வேதம்' போதிக்கும் கட்டுப்பாட்டு உணர்ச்சியானது, சீக்கியர்கள் நாட்டு வாழ்வில் பங்கேற்று நற்பணியாற்ற உதவி செய்துள்ளது.

நாட்டின் பாதுகாப்பில் சீக்கியர்கள் ஆற்றியுள்ள பணி அனைவரும் அறிந்ததுதான். சீக்கியர்கள் ஆண்டாண்டுக்காலமாகத் தங்கள் வீரத்தையும், அஞ்சாநெஞ்சுள்ள ஆற்றலையும் வளர்த்துவந்துள்ளனர். சண்டையில் போரிடுவது மட்டுமல்ல; சமாதானத்திற்காக உழைப்பதிலும் அவர்கள் சளைத்தவர்களல்லர் என்று எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

பஞ்சாப் மாநிலத்திலுள்ள விவசாயிகள் அயராது உழைக்கக் கூடியவர்கள்; புதுவிதமான விஞ்ஞான வேளாண்மை முறைகளைக் கையாண்டு முன்னேற்றம் காண்பவர்கள் அவர்கள். இந்தத் திறமைகள் அவர்களுக்கு நல்ல பயனைத் தந்துள்ளன.

'உணவுத் துறை நிர்வாகப் பொறுப்பேற்றவன்' என்ற முறையில், பஞ்சாப் மாநிலத்தில் சிதறிக் கிடக்கும் நிலங்களை ஒன்று சேர்ப்பதற்காகவும், வேளாண்மையானது நல்ல இலாபமுள்ள தொழிலாளர் விளங்கவும் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள பணிகள் என் கவனத்தைப் பெரிதும் கவர்ந்துள்ளன.

பஞ்சாப் மாநிலத்து மக்கள் தொழில் நுட்பம் உள்ளவர்களும் கூட; அந்தத் தொழில் நுட்பத்தினால் அவர்கள் பல சிறு தொழில் பிரிவுகளை உருவாக்கி வளர்த்துள்ளார்கள்.

பஞ்சாப் மக்கள் ஒவ்வொரு வரும் தனிப்பட்ட முறையில் நல்ல உழைப்பாளிகள் — துடிப்பானவர்கள். சமுதாய ரீதியில் சமுதாயக் கோட்பாடுகளைப் பயபக்தியுடன் பின்பற்றுவர்கள். தேசிய அடிப்படையில் தங்களது உரிமைகளையும் கடமைகளையும் உணர்ந்திருப்பவர்கள். சிறந்த நாட்டுப் பற்றுக் கொண்டிருப்பவர்கள்; எனவே தான், அவர்களால் நாட்டு வாழ்க்கையில் சிறந்த பங்கேற்க முடிந்துள்ளது. இந்தப் பண்புகள் எல்லாம் எதிர்காலத்தில் மேன்மேலும் வளர்ந்து உங்கள் சமுதாயம் இன்னும் சிறப்போடு விளங்க வழிவகுக்கும் என்று நம்புகிறேன்."

நன்றியறிவிப்பு

"நாடாளுமன்ற மேலவைக்கு என்னை கழக வேட்பாளராக்கி, சட்டமன்றம் மூலம் வெற்றி பெறச் செய்த நமது தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கும், ஏனையகழகத் தலைவர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், தோழமைக் கட்சிகளின் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதுடன், எனது வெற்றி கேட்டு நேரிலும் தந்தி மூலமும் வாழ்த்தியவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்"

என்று, நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் ஜி. ஏ. அப்பன் தெரிவிக்கிறார்.

தென்காசி வட்ட தி. மு. கழகம்

கிளைக் கழக நிர்வாகிகள் கவனத்திற்கு!

"தென்காசி சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தலை முன்னிட்டு வட்டக் கழகம் தீவிரமாக ஆக்க வேலையில் ஈடுபட வேண்டியதிருப்பதால், 7—4—68-ம் நாளைய வட்டக் கழகத் தீர்மானப்படி ஒவ்வொரு கிளையும், கழகத் தோழர்களும் நிதி திரட்டும் வேலையில் தீவிரமாக ஈடுபடுவதோடு, வட்டக் கழகம் பற்றுக்குறை நிதி நிலையில் இருப்பதால், ஒவ்வொரு கிளையும் குறைந்த அளவு ரூ. 15 ஏப்ரல் மாத இறுதிக்குள் அனுப்பிவைக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

"21—4—68-ம் நாளைய தென்காசித் தொகுதிக் குழுத் தீர்மானத்திற்கிணங்க, தென்காசி நகரில் நடைபெறவிருக்கும் மே நாள் விழா ஊர்வலத்திற்கு ஒவ்வொரு கிளையும், தங்கள் கிளையின் பெயர் எழுதிய கொடியுடன் திராளான தோழர்களை அனுப்பி ஊர்வலத்தையும், பொதுக்கூட்டத்தையும் சிறக்கச் செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

"தலைமைக் கழக அறிக்கைக் கிணங்க கிளைக்கழக நிர்வாகிகள் உறுப்பினர் சீட்டுக்களை உரியவர்களிடம் உடனடியாக சேர்க்க வேண்டுகிறேன்.

"புதிய நிர்வாகிகள் தேர்தலுக்கு முன்னதாகக் கிளையின் உடமைகளைச் செயற்குழுவால் கணக்கிட்டுப் புதிய நிர்வாகக் குழுவினரிடம் கொடுக்கும்வகையில் ஏற்பாடு செய்து வைக்கவும் கேட்டுக்கொள்கிறேன்"

என்று, வட்டச் செயலாளர் அ. இராமநாதன் அறிவிக்கிறார்.

தி. மு. கழகப் பொதுத் தேர்தல்

1! 1967-ல் நிறைவேற்றப்பட்ட தி. மு. கழகத்தின் புதிய சட்ட திட்டங்கள், விதி 25 பிரிவு 4-ன்படி, கழகத்தின் பல்வேறு அமைப்புகளுக்கான தேர்தல் நாட்கள், ஏற்கனவே தலைமைக் கழக அறிக்கை 1/68-ல் குறிப்பிட்டிருந்த நாட்களில் 19—4—68 அன்று கூடிய மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் செய்யப்பட்ட சில மாறுதல்களுக்கேற்ப, கீழ்க்கண்டவாறு இறுதியாக உறுதி செய்யப்படுகின்றன:—

நாட்கள் 1968	அமைப்புகள்
மே 4, 5:	சிற்றூர்-பேரூர்க் கிளைகள், நகர—பெருநகர வார்டு கிளைகள்
மே 18,19:	சென்னை வட்டக் கிளைகள், நகர—பெருநகரக் கிளைகள், மாநில அமைப்புகளின் கிளைக் கழகங்கள்
சூன் 2:	வட்டக் கழகங்கள், சென்னைப் பகுதிக் கிளைகள்
சூன் 23:	மாவட்டக் கழகங்கள், மாநில அமைப்புகள்
சூலை 21:	தலைமைக் கழகம்

2. 1965 மே திங்களுக்குப் பிறகு உறுப்பினர் உரிமையைப் புதுப்பித்தும், புதிய உறுப்பினராகச் சேர்ந்தும், தலைமைக் கழகத்திலிருந்து முறைப்படி அனுப்பிவைக்கப்பட்ட உறுப்பினர் உரிமைச் சீட்டுகள் பெற்றிருப்பவர்கள் மட்டுமே தேர்தலில் கலந்துகொள்ள உரிமையுடையவர்கள் ஆவர்.

3. தேர்தல் நடத்தும் முறைகள், கிளைகள்—உறுப்பினர்கள்—தேர்தல் ஆணையாளர்—வேட்பாளர் ஆகியோரின் கடமைகள், வேட்பாளர் விண்ணப்பத் தாள் போன்ற விவரங்கள், தலைமைக்கழகம் அச்சிட்டு வெளியிட்டுள்ள 'தி. மு. கழகத் தேர்தல் விதிமுறைகள்' என்ற வெளியீட்டில் விளக்கப்பட்டுள்ளன.

இந்த வெளியீட்டின் பிரதியும், திருத்தப்பட்ட புதிய சட்டத் திட்டப் பிரதியும் ஒவ்வொரு கிளைக்கும் தலைமைக் கழகத்திலிருந்து விரைவில் அனுப்பி வைக்கப்படும். தனிப்பட்ட முறையில் தேவைப்படுவோர் உரிய கட்டணம் செலுத்தியும் பெற்றுக்கொள்ளலாம்.

வடாற்காடு

மாவட்டத்தில் புதிய தொழிற்சாலை

தமிழக அரசு ஆலோசனை

திருச்சி, ஏப் 28—

தோல் பதனிடும் தொழிலுக்குத் தேவைப்படும் சோடியம் டைக்ரமேட்' என்ற பொருளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை, வடாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த ஆம்பூர் அல்லது வாலாஜா பேட்டையில் ஏற்படுத்துவது பற்றித் தமிழக அரசு ஆலோசனை செய்து வருவதாகத் தெரிகிறது. இது நாள்தோறும் 2 டன் தயாரிக்கக்கூடியதாக இருக்கும்.

இந்தத் தொழிற்சாலையை அமைப்பதற்கு அந்நியச் செலாவணி தேவைப்படாது எனக் கூறப்படுகிறது.

இதற்கு வேண்டிய முக்கியமான மூலப்பொருள் குரோம் கனி; இதை, மைசூர் மாநிலத்திலிருந்து பெறமுடியும்.

பெரும்பாலான தோல் தொழிற்கூடங்கள் வடாற்காடு மாவட்டத்தில் அமைந்திருப்பதால், இந்தத் தொழிற்சாலை ஆம்பூரிலோ அல்லது வாலாஜாபேட்டையிலோ ஏற்படுத்தபபடும்,

வீட்டுப் பயன்பாட்டுக்கே மண்ணெண்ணெய்

லாரிகள்ஓட்டபயன்படுத்தினால் கடும் நடவடிக்கை

திருச்சி, ஏப். 30—

"லாரிகளை ஓட்ட டீசல் எண்ணெய்க்குப் பதில் மண்ணெண்ணெயைப் பயன்படுத்துவோர் மீது கடுமையான நடவடிக்கைகளை எடுக்குமாறு போலீஸ் கண்காணிப்புக் குழுவுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குத் தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது"

என்று, அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன், இங்கு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

"தமிழகத்தில் டீசலுக்குப் பதில் மண்ணெண்ணெயைப் பயன்படுத்தும் பழக்கம் அதிகரித்துவருகிறது; வீடுகளில் அடுப்புக்கும் விளக்கெரிக்கவும் மட்டுமே மண்ணெண்ணெயைப் பயன்படுத்த வேண்டும்" என்றும் அமைச்சர் கூறினார்.

"லாரிகளை டீசலுக்குப் பதில் மண்ணெண்ணெய் மூலம் ஓட்டுவதால் அரசுக்கு வரி இழப்பு கணிசமாக ஏற்படுகிறது; டீசல் லிட்டருக்கு 10 காசு வரி வசூலிக்கப்படுகிறது; மண்ணெண்ணெய் மூலம் வரி 2½ காசுதான் வரியாகக் கிடைக்கிறது" என்றும் அமைச்சர் சொன்னார்.

'அறிவகத்'தில் அமைச்சர்முத்துசாமி

சென்னை, ஏப். 29—

உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு மா. முத்துசாமி அவர்கள் இன்று பகல், தி. மு. கழகத் தலைமை நிலையமான 'அறிவகத்'திற்குத் திடீரென வந்தார்.

அப்போது, 'அறிவகத்'தில் அமைப்புச் செயலாளர் திரு. என். வி. நடராசன் அவர்கள், கழகத் தேர்தல் தொடர்பான அலுவல்களைக் கவனித்துக்கொண்டிருந்தார்.

அமைச்சரை, அமைப்புச் செயலாளர் வரவேற்று உபசரித்தார்.

அமைப்புச் செயலாளரிடம் அமைச்சர், கழகத் தேர்தல்கள் குறித்து சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தார்.

பின்னர், அறிவகத் தோழர்களிடமும், 'நம் நாடு' அலுவலகத் தோழர்களிடமும் அளவளாவிக் கொண்டிருந்துவிட்டு, அனைவரிடமும் விடைபெற்றுக் கொண்டு சென்றார்.

ஈஸ்ட் ஏஷியாடிக் கம்பெனியில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டுவிட்டுத் திரும்பும் வழியிலேயே அமைச்சர், 'அறிவகத்'திற்கு வருகைதந்தார்.

பொள்ளாச்சி நகரத் தோழர்கட்கு:

"பொள்ளாச்சி நகரக் கிளையில் கழக உறுப்பினர்களாகத் தங்களைப் பதிவு செய்துகொண்டவர்களில் ஒரு சிலர், இன்னும் தங்களின் உறுப்பினர் அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவில்லை; வருகின்ற 19—5—68-ல் நடைபெறவிருக்கும் கழக அமைப்பின் தேர்தலில், உறுப்பினர் அட்டைகள் உள்ளவர் மாத்திரமே அனுமதிக்கப்படுவார்கள்.

"எனவே, உறுப்பினர் அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் பொள்ளாச்சி வெங்கிட்ரமணய்யர் தெருவிலுள்ள கழக நாடாளுமன்ற—சட்டமன்ற உறுப்பினர்கள் அலுவலகத்தில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்"

என, நகரச் செயலாளர் தி. இராமசாமி கேட்டுக்கொள்கிறார்.

ஆடுகள் விற்பனைக்குரிய விற்பனை வரி விலக்கு

தமிழக அரசு ஆய்வு

திருச்சி, ஏப். 28—

"ஆடுகள் விற்பனைக்குரிய விற்பனை வரியை நீக்குவது பற்றித் தமிழக அரசு பரிசீலித்து வருகிறது"

என வருவாய்த்துறை அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள், இங்கு நடந்த வர்த்தகர்கள் மாநாட்டில் தெரிவித்தார்.

சர்க்கரைக் கட்டுப்பாடு

அமைச்சர் மேலும் பேசுகையில், 'நாட்டில் சர்க்கரைக்குக் கட்டுப்பாட்டை ஓரளவு நீக்கியதால் ஏற்பட்ட குழப்பத்துக்கு மத்திய அரசே காரணம்' என்பதை விளக்கினார்.

"தமிழக அரசுதான், முயற்சி எடுத்துக்கொண்டு தாராள மார்க்கெட்டில் அனுமதிக்கப்பட்டுள்ள சர்க்கரையில் 40 சதவிகித விற்பனையை ஒழுங்குபடுத்தியது; அதனால்தான் தமிழகத்தில் வெளி மார்க்கெட் சர்க்கரை விலை கிலோ ரூ. 3.50 ஆகவும், உ. பி. போன்ற மாரிலங்களில் குவிண்டால் விலை ரூ 400 ஆகவும் விற்கிறது" என்றும் சுட்டிக் காட்டினார்.

"தற்போது எந்தக் கட்டுப்பாட்டையும், தளர்த்தக் கூடிய நிலையில் அரசு இல்லை" என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அறிஞர் அண்ணா மணி விழா மலர்

கழகத் தோழர்கட்கு வேண்டுகோள்

"வருகின்ற செப்டம்பர் திங்களில் அறிஞர் அண்ணா அவர்களின் 60-ம் ஆண்டு பிறந்த நாள் விழாவின்போது சிறப்பான முறையில் மலர் ஒன்று வெளியிடவிருக்கிறோம். கழகத் தோழர்களிடமும், நண்பர்களிடமும், இளமைப் பருவத்திலிலிருந்து இன்றுவரை எடுக்கப்பட்ட அண்ணா அவர்களின் புகைப்படங்கள், 'நெகடிவ்'கள் இருந்தால் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவேண்டுகிறோம்.

"புகைப்படங்கள் அனுப்புபவரின் பெயர் மலரில் வெளியிடப்படும். அச்சானதும் அவைகள் பத்திரமாகத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

"விரைவில் புகைப்படங்கள் அனுப்பி உதவி, மலர் சிறப்பான முறையில் வெளிவர அனைவரையும் ஒத்துழைக்குமாறு வேண்டுகிறேன்"

என்று திருச்சி மாவட்ட தி. மு. க. செயலாளரும் அண்ணா மணி விழாக் குழுத் தலைவருமான திரு. அன்பில் தர்மலிங்கம் அறிவிக்கிறார்.

முகவரி:—

பி. பாண்டுரங்கன்,
நாதன் அண்டு கம்பெனி,
77, மதுரை ரோடு,
திருச்சி-8.

மூன்று நாட்களுக்கு முன்னதாகவே....

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டம் டில்லியில், மே 15-ம் நாள் கூடுகிறது; அந்தக் கூட்டத்தில் விவாதிக்க வேண்டிய முக்கியப் பிரச்சினைகள் குறித்து மற்ற அமைச்சர்களோடும், அதிகாரிகளோடும் கலந்து பேச இரண்டு நாட்களாவது தேவை என்று அண்ணா கருதுகிறார்.

எனவே அமெரிக்காவில் தமது சுற்றுப்பயணத்தில் ஒரு நாள் குறைத்துக்கொள்ளவும், ஜப்பான் சுற்றுப்பயணத்தில் இரண்டு நாட்கள் குறைத்துக் கொள்ளவும் திட்டமிட்டிருக்கிறார்.

இப்போது அண்ணா அவர்கள், போர்ட்டோ ரீக்கோ சென்றுள்ளார்; அங்கு இரண்டு நாட்கள் தங்கிச் சுற்றிப் பார்த்து விட்டு வந்து புளோரிடாவையும், ஏனைய அமெரிக்க மாநிலங்களையும் பார்வையிடுவார்.

அண்ணா அவர்கள் நேற்று பெரும் பொழுதை வாஷிங்டனிலும், சுற்று வட்டாரங்களிலும் வசிக்கும் இந்தியச் சமூகத்தினரைச் சந்திப்பதிலேயே செலவிட்டார்.

அவர்களெல்லாம் சேர்ந்து, அண்ணாவைச் சந்திப்பதற்காக இந்தியத் தூதரகத்தில் இரண்டு சிறப்புக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

குடியரசுத் தலைவர் திரு. ஜான்சனை, அண்ணா அவர்கள் சாதாரண முறையில் சந்திக்க விரும்பியபோதிலும், குடியரசுத் தலைவரின் நிகழ்ச்சி நிரல்படி அவர் ஏற்கனவே வேறு அலுவல்களில் ஈடுபட்டிருந்ததால் சந்திக்கும் வாய்ப்பு ஏற்படவில்லை.

போர்ட்டோ ரீக்கோ தீவுக்குப் புறப்பாடு

அறிஞர் அண்ணா அவர்கள், தமது இரண்டு நாளைய அமெரிக்கத் தலைநகர் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு, ஞாயிறு பிற்பகலில், விமானம் மூலம் தென் அமெரிக்காவிலுள்ள போர்ட்டோ ரீக்கோ தீவுக்குப் பயணமானார்; அங்கு இரு நாட்கள் தங்குவார்.

அண்ணாவைக் கவர்ந்த அரசியல் கூட்டம்

சனிக்கிழமை நடைபெற்ற ஓர் அரசியல் கூட்டத்தை அவர் ஆர்வத்துடன் தமது அறையில் இருந்தவாறே பார்வையிட்டார். இந்தக் கூட்டத்தில்தான் இப்போது குடியரசு துணைத் தலைவராக உள்ள ஹயூபர்ட் எச். ஹம்ப்ரி, தாம் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் பதவிக்கு போட்டியிடப் போவதாக அறிவித்தார்.

அண்ணா அவர்கள் தங்கியிருந்த ஷோர்ஹாம் ஓட்டலில்தான் இக் கூட்டம் நடைபெற்றது; இதில் நிலவிய உற்சாகமும், காட்சிகளும் அண்ணாவைப் பெரிதும் கவர்ந்தன.

இந்தக் கூட்டத்தின் நிகழ்ச்சிகள் அனைத்தும், தொலைக் காட்சி (டெலிவிஷன்) மூலம் காண்பிக்கப்பட்டது.

அறிஞர் அண்ணா அவர்களும், அவரது செயலாளர் கே. சொக்கலிங்கமும் இந்தக் கூட்டத்துக்குச் சிறப்பு அழைப்புப் பெற்றிருந்தனர். ஆனால், அண்ணா அவர்களுக்கு ஏராளமான அலுவல்கள் இருந்தமையால் அவர் கலந்துகொள்ள முடியவில்லை; எனினும், ஹம்ப்ரி நேரில் அறிவிப்பு வெளியிடுவதை தம் அறையிலிருந்த தொலைக் காட்சிப் (டெலிவிஷன்) பெட்டியில் பார்வையிட்டார்.

பின்பு, அமெரிக்க அரசாங்க வெளிஉறவுத் துறையினர் அவருக்கு அளித்த பகல் விருந்தில் கலந்துகொள்வதற்குப் புறப்பட்டுச் சென்றார்.

மனம் நெகிழ்ந்தார்!

முற்பகலில் அறிஞர் அண்ணா அவர்கள், தலைநகரை மீண்டும் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டுச் சென்றார்.

கென்னடி கல்லறை—வீர மரணம் எய்திய இராணுவ வீரர்கள் நினைவுக் கல்லறை—லிங்கன் நினைவாலயம்—ஜெஃபர்சன் நினைவு நிலையம் முதலியவற்றை அண்ணா பார்வையிட்டார்.

வாஷிங்டன் நினைவுச் சின்னம், சட்டமன்ற காப்பிட்டால் மாளிகை, சட்டமன்ற நூலகம், இராணுவத் தலைமையகம், வெளி உறவு — வாணிப — வேளாண்மைத் துறைகளின் அலுவலகங்கள் உட்படப் பொதுக் கட்டிடங்கள் பெரும்பாலானவற்றை காரில் செல்லும்போதே அண்ணா கண்டார்.

உன்னிப்புடன் படித்தார்

ஆபிரகாம் லிங்கன், கென்னடி நிலையங்களைப் பார்வையிட்ட போது அண்ணா மனம் நெகிழ்ந்தார்.

லிங்கனின் மாபெரும் கற்சிலையை அவர் கூர்ந்து ஆராய்ந்தார்; லிங்கன் நிகழ்த்திய கெட்டிஸ்பர்க் சொற்பொழிவு, அவரது இரண்டாவது பதவியேற்பு உரை ஆகியவற்றின் முக்கியப் பகுதிகளை உன்னிப்பாகப் படித்தார்.

நினைவாலயத்தின் பளிங்குக் கற்சுவர்களில் இந்த உரைகள் பொறிக்கப்பட்டுள்ளன.

கென்னடி கல்லறையினையும் அண்ணா கூர்ந்து பார்வையிட்டார். மறைந்த அதிபரின் பதவியேற்பு உரையின் சில பகுதிகள், கென்னடியின் கல்லறையில் பொறிக்கப்பட்டுள்ளன; இவற்றையும் அண்ணா ஆர்வத்துடன் படித்தார்.

புதுவகைச் சிற்றுண்டிச்சாலையில்...

சுற்றுலா முடிந்ததும், அவர், ஒரு புதுவகைச் சிற்றுண்டிச் சாலைக்குச் சென்றார். இங்கு காரில் வருவோர், ஓரிடத்தில் தம் கார்களை நிறுத்திவைத்துவிட்டு, அங்குள்ள பேசும் கருவி வழியாகத் தமக்கு வேண்டிய உணவு—பான வகைகளைக் கேட்கின்றனர்; அவை கொண்டுவந்து வழங்கப்படுகின்றன; காரிலிருந்து இறங்காமலே அவற்றைச் சாப்பிடுகிறார்கள். அந்தச் சிற்றுண்டிச் சாலையில் அவர் காலை உணவு அருந்தினார்.

அமெரிக்க அரசின் தனி ஏற்பாடு

லிங்கன் வரலாற்று ஆராய்ச்சியில் அண்ணா காட்டிய ஆர்வம் அமெரிக்கர்களைப் பெரிதும் கவர்ந்துள்ளது; சனிக்கிழமை மாலையில், போர்டு நாடக அரங்கிலுள்ள லிங்கன் தேசிய அரும்பொருள் களஞ்சியத்தை அண்ணா பார்வையிட்டார். இந்தக் களஞ்சியம், அண்ணாவைப் பெரிதும் கவர்ந்தது. இந்த நாடக அரங்கில்தான் லிங்கன் துப்பாக்கிக் குண்டுக்கு இரையானார். வரலாற்றுச் சிறப்புள்ள இந்த அரங்கு தற்போது புதுப்பிக்கப்பட்டு, பொதுமக்கள் சென்று பார்வையிடும் நாடக அரங்கமாக ஆக்கப் பெற்றுள்ளது.

இந்தக் களஞ்சியத்தில் லிங்கன் அணிந்த முகமூடி—அவர் தேர்தலில் நின்றபோது வெளியிட்ட இயக்கச் சுவரொட்டிகள்—லிங்கன் ஓவியங்கள்—அவர் பயன்படுத்திய பொருள்கள் ஆகியவற்றை அண்ணா பார்த்தார்.

லிங்கன் சிறுவனாக இருக்கையில், தமது மரக்குடிலில் கணப்பு அருகில் உட்கார்ந்து பாடம் படிப்பதை சித்தரிக்கும் ஓவியமும் அங்கு இருந்தது.

தமிழக முதலமைச்சருக்கு அமெரிக்க அரசின் வெளி உறவுத் துறை தனிச் சிறப்பான ஏற்பாடு ஒன்றைச் செய்தது.

நாடக அரங்கு, அரும்பொருள் களஞ்சியம் இரண்டுக்கும் பொறுப்பு வகிப்பது பூங்காப் பணித்துறை ஆகும்; அத்துறையினருக்கு ஆணையிட்டு, லிங்கன் சுடப்பட்ட இருக்கையை அண்ணா நேரில் சென்று பார்ப்பதற்கு அமெரிக்க அரசு தனி ஏற்பாடு செய்திருந்தது.

தலைசிறந்த வெளிநாட்டு விருந்தினருக்குத்தான் இவ்வாறு அனுமதி வழங்கப்படுவது உண்டு.

'தனி அனுபவம் எனக்கு ஏற்பட்டது'

லிங்கன் உடலில் குண்டுபாய்ந்த இரவு அவர் இருந்த இருக்கையில் எந்த விரிப்பும் உறைகளும் இருந்தனவோ, அவை இன்றும் இந்த மாளிகையில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.

லிங்கனைச் சுட்டுவிட்டு, கொலைகாரன் ஜான் வில்க்கஸ் பூத், மாளிகையிலிருந்து கீழே குதிக்கும்போது பதிந்த அவனது கை அடையாளங்களையும் அங்கு தீட்டி வைத்திருக்கிறார்கள்.

ஜிம் பிஷப் என்பவர் எழுதிய 'லிங்கன் சுடப்பட்ட நாள்' என்னும் புத்தகத்தை நன்கு படித்தார்—அண்ணா; 'புத்தகத்தைப் படிக்கும்போது என் மனத்தில் பட்டதைவிட சிறந்த ஒரு தனி அனுபவம், நாடக அரங்கைப் பார்த்த பின்பு ஏற்பட்டது' என, அண்ணா குறிப்பிட்டார்.

அமெரிக்க அமைச்சரின் சிறப்புமிக்க விருந்து

வாஷிங்டனுக்கு வருகை தந்த அண்ணா அவர்களுக்கு சிறப்புச் செய்யும் பொருட்டு அமெரிக்கத் துணை அமைச்சர் வில்லியம் ஹாண்ட்லி விருந்தளித்தார்.

இந்த விருந்துக்கு, புகழ் பெற்ற அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள்—அமெரிக்க வெளிநாட்டிலாகாவின் உயர் மட்ட அதிகாரிகள் ஆகியோர் வந்திருந்தனர். விருந்தின் போது அவர்களுடன் அறிஞர் அண்ணா கலந்துரையாடினார்.

இந்தியத் தூதரக அதிகாரி பானர்ஜி, இந்தியப் பொருளாதார நிபுணரான எஸ். ஜெகன்னாதன் ஆகியோரும் இந்த விருந்தில் கலந்துகொண்டனர்.

அறிஞர் அண்ணாவை வரவேற்று அமெரிக்க உதவி அமைச்சர் வில்லியம் ஹாண்ட்லி பேசினார்.

வரவேற்புக்குப் பதிலளித்து, அறிஞர் அண்ணா ஆற்றிய உரை, விருந்தில் கலந்துகொண்ட அமெரிக்கர்களைப் பெரிதும் கவர்ந்தது.

"தமிழ் மொழிக்கும்—பண்பாட்டுக்கும் அரும்பாடுபட்டு வந்த போதிலும், இந்திய நாட்டு ஒற்றுமைக்கும், அதே சமயத்தில் பற்றுதலுடன் பாடுபட்டு வருகிறேன்; இந்த ஒற்றுமையில் எனக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு; இது குறித்து இந்தியர்களிடையே வேற்றுமை இருப்பதற்கில்லை"

என்று அண்ணா அவர்கள் வலியுறுத்திக் கூறினார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

சென்னையில் மே நாள் விழா

மாபெரும் பொதுக்கூட்டம்

1--5--1968 புதன் மாலை 6-30 மணிக்கு கடற்கரை -- ஐ.ஜி. அலுவலகம் எதிரில்

தலைவர்: திரு. என். வி. நடராசன் எம்.எல்.சி.

பேசுவோர்:

மாண்புமிகு அமைச்சர்
இரா. நெடுஞ்செழியன்
டாக்டர் அபிபுல்லாபேக் (மேயர்)
கே. டி. கே. தங்கமணி
எம். எஸ். கிருஷ்ணமூர்த்தி
வி. பி. சிந்தன்
புலவர்மணி வி. நூர்முகம்மது
டி. பி. எஸ். வடிவேலு
எஸ். கிருஷ்ணமூர்த்தி (முன்னாள் மேயர்)
கே. எஸ். சுந்தரம்
ஆர். இராமநாதன்

மற்றும் சர்வகட்சித் தோழர்களும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் பேசுவர்.

—சர்வகட்சி மேதின விழாக் குழு

மருத்துவனையில் எம். எஸ். மணி

வேலூர், ஏப். 24—

திருச்சி 1-வது தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தோழர் எம். எஸ். மணி மீண்டும் இருதய நோயின் காரணமாக சிகிச்சை பெற வேலூர் சி. எம். சி. (அமெரிக்கன்) மருத்துவமனையில் இன்று சேர்க்கப்பட்டார். அவருக்கு எம். டி. எஸ். 219-ம் அறை ஒதுக்கப்பட்டுள்ளது.

வேலூர் நகராட்சிமன்றத் தலைவர் திரு. மா. பா. சாரதி எம்.எல்.ஏ., கலசபாக்கம் எஸ். முருகையன் எம்.எல்.ஏ., வேலூர் சங்கர சண்முகம் [illegible]யோர் அவருக்கு வேண்டிய [illegible]தவிகளைச் செய்து வருகிறார்.

நடக்க இருப்பவை

1--5--68

சென்னை 97-வது வட்டம்

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில், மாலை 7-மணிக்கு, சடையப்ப முதலித் தெருவில்; தலைவர்: மே. சொ. மகாலிங்கம்; பேசுவோர்: எம். ஆர். ஆர். வாசு, இளம்பரிதி, சைதை சம்பந்தம் எம்.சி., ஈ. குமார், சேகர், மற்றும் பலர்.

ஒலகடம்

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு காந்தி திடலில்; தலைவர்: இருசா (கவுண்டர்); பேசுவோர்: ஆ. திராவிடமணி, ஏ. எம். இராசா எம்.எல்.ஏ., ஈ. எம். நடராசன் எம்.எல்.ஏ., மற்றும் பலர்.

வெள்ளகோவில்

விசைத்தறித் தொழிலாளர்கள் சங்கச் சார்பில் மாலை 7-மணிக்கு அண்ணா திடலில்; தலைவர்: என். பழனிசாமி; பேசுவோர்: செ. அரங்கராசன் எம்.சி., கே. என். சாமிநாதன் எம்.எல்.ஏ., மு. பழனிசாமி, வி. கே. கலைமணி, கே. எஸ். தண்டபாணி, மற்றும் பலர்.

குழுக் கூட்டங்கள்

உடையார்பாளையம் வட்டம்

"உடையார்பாளையம் வட்ட தி. மு. க. கிளைக் கழகக் கூட்டம், 2—5—68 மாலை 3-மணியளவில், திரைப்பட அரங்கில் நடைபெறும்" என்று வட்ட தி. மு. க. செயலாளர் கோ. சிவப்பெருமாள் அறிவிக்கிறார்.

கரூர் வட்டம்

"கரூர் வட்ட தி. மு. க. பிரதிநிதிகள் கூட்டம், 3—5—68 பிற்பகல் 2-மணிக்கு வட்டக் கழகப் பணிமனையில் (29, ஜவகர் கடைவீதி, கரூர்) நடைபெறும்" என்று வட்டச் செயலாளர் ரெ. ந. இராமசாமி அறிவிக்கிறார்.

சென்னை ஓட்டல் தொழிலாளர் மாநாடு -- மே நாள் விழா

சென்னை நகர ஓட்டல் தொழிலாளர் சங்க 24-வது மாநாடும்—மே நாள் விழாவும் 1—5—68 காலை 10-மணிக்கு கோகலே மண்டபத்தில் நடைபெறும்; திரு. பி. ஆர். பரமேசுவரன் கொடியேற்றுவார்; திரு. வி. வெங்கட்ராமன் திறப்புரையாற்றுவார்; திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி (முன்னாள் மேயர்) தலைமைவகிப்பார்; மேயர் டாக்டர் அபிபுல்லா பேக், தி. மு. கழக அமைப்புச் செயலாளர் திரு.என்.வி. நடராசன் எம்.எல்.சி., திரு. ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ, திரு. வி. பி. சிந்தன், திரு. கே. எம். ஹரிபட் ஆகியோர் சிறப்புரையாற்றுவர்; மாலை 6 மணிக்கு இசைவிருந்தும், 7 மணிக்கு கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

சென்னையில்

மே விழா -- ஊர்வலம்

அனைத்துக் கட்சிக் குழு வேண்டுகோள்

மே நாள் விழா அனைத்துக் கடசிக் குழுவின் வேண்டுகோளுக்கேற்ப, நாடெங்கும் விழாவினைச் சீரும் சிறப்புமாகக் கொண்டாட ஆங்காங்குள்ள அனைத்துக் கட்சித் தோழர்கள்—தொழிற் சங்கப் பிரதிநிதிகள் முனைந்திருப்பதை அறிந்து பெருமகிழ்ச்சியடைகிறோம்.

சென்னை மாநகரில் மே நாளன்று மாலை 3 மணியளவில் அனைத்துக் கட்சித் தோழர்களும், தொழிற் சங்கங்களின் தோழர்களும், பொதுமக்களும் பல்லாயிரக்கணக்கில் பாரிமுனை(பாரிஸ் கார்னர்)யிலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு, ஐ.ஜி. அலுவலகத்தின் எதிரிலுள்ள கடற்கரை போய்ச் சேருவர்.

மாலை 6-30 மணிக்கு அங்கு மே விழாக் கூட்டம் நடைபெறும்.

ஊர்வலத்திலும், விழாக் கூட்டத்திலும் தொழிற் சங்கத் தோழர்கள்—அனைத்துக் கட்சியைச் சார்ந்த தோழர்கள்—பொதுமக்கள் பல்லாயிரக்கணக்கில் திரண்டுவந்து, மே நாள் விழாவினை வரலாற்றுச் சிறப்புடையதாக்கித் தருமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

என். வி. நடராசன்
அமைப்பாளர், அனைத்துக் கட்சி மே நாள் விழாக் குழு